# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office **பின்புறம்**),

**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

**<u>ஆணை நாள் 14.05.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண்கள் (1) SA 5968/விசாரணை/E/2024 (2) CP 2541/விசாரணை/E/2024</u>**

| | | |
|---|---|---|
| திரு ச.சிதம்பரம் | .. | மேல்முறையீட்டாளர் |
| /எதிர்/ | | |
| பொதுத் தகவல் அலுவலர்/<br>மாவட்ட ஆட்சியரின்<br>நேர்முக உதவியாளர் (பொது)<br>மதுரை மாவட்டம் | .. | பொது அதிகார அமைப்பு |

******

**<u>ஆணை</u>**

1) மேற்படி வழக்குகள் குறித்த இவ்வாணையத்தில் 10.02.2026 அன்று விசாரணை நடைபெற்றபோது, பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு அனுப்பியிருந்த 06.02.2026 நாளிட்ட பதில் கடிதம் கிடைக்கப்பெற்ற பின், அது குறித்து மனுதாரர் ஏதேனும் தெரிவிக்க விரும்பினால் அந்த ஆணை கிடைக்கப்பெற்ற ஒரு வாரத்திற்குள் எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டுமென மனுதாரருக்கு, உத்தரவிடப்பட்டிருந்தது.

2) அதனை தொடர்ந்து, மனுதாரர் 04.04.2026 நாளிட்டு இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள எழுத்துமூலமான வாதுரையில், தனக்கு உரிய தகவல்கள் வழங்கப்படவில்லையென தெரிவித்துள்ளார்.

3) பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு 06.02.2026 நாளிட்டு அனுப்பியுள்ள பதில் கடிதத்தில், "மனுதாரர் மேற்படி புலங்கள் தனது மூதாதையர் சொத்து எனக் கருதினால் இறப்புச் சான்று, வாரிசுச் சான்று, கிரைய ஆவணங்கள், வில்லங்ச் சான்று மற்றும் அதற்குரிய ஆவணங்களுடன் மேலூர் வருவாய் கோட்டாட்சியரிடம் விண்ணப்பித்து உரிய பரிகாரம்

தேடிக் கொள்ளலாம் அல்லது உரிமையியல் நீதிமன்றத்தை அணுகலாம் என்ற விவரம் தகவலாக தெரிவிக்கப்படுகிறது” என்று கூறப்பட்டுள்ளதை ஆணையம் ஏற்கிறது. வழங்கப்பட்ட தகவல் குறித்து, மனுதாரருக்கு ஆட்சேபம் ஏதும் இருக்கும்பட்சத்தில், அது குறித்து சம்மந்தப்பட்ட துறையின் உயர் அதிகாரி அல்லது நீதிமன்றத்தை நாடியே நிவாரணம் தேடிக் கொள்ள வேண்டுமென மனுதாரருக்கு தெரிவித்து, இந்த இரண்டு (மேல்முறையீட்டு மனு மற்றும் புகார் மனு) மனுக்களையும் முற்றாக்கம் செய்து ஆணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள் (1) SA 5968/விசாரணை/E/2024 (2) CP 2541/விசாரணை/E/2024</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)
மதுரை மாவட்டம்

திரு ச.சிதம்பரம்.
எண்.29/14, பி.கே.சி. இல்லம் (தரைதளம்),
காந்திஜி தெரு, ஜெய்ஹிந்துபுரம்,
2-வது பிரதான சாலை,
மதுரை - 625 011

Copy to File
CR/PA